بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *14/03/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**திருக்குர்ஆன், மாநபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் ஆகியவற்றின் ஒளியில் திருக்குர்ஆனின் முக்கியத்துவம், மகத்துவம் மற்றும் அருள்கள் பற்றி அகப்பார்வைக்கு ஒளியூட்டக்கூடிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ்வின் அருளால் நாம் ரமலானின் இரண்டாவது பத்து நாள்களைக் கடந்து கொண்டிருக்கிறோம். திருக்குர்ஆனுக்கு ரமலானுடன் ஒரு சிறப்பான தொடர்பு உள்ளதாக அல்லாஹ் கூறியுள்ளான். அவன் கூறுகிறான்:

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡہِ الۡقُرۡاٰنُ ہُدًی لِّلنَّاسِ وَ بَیِّنٰتٍ مِّنَ الۡہُدٰی وَ الۡفُرۡقَانِ

பொருள்: இந்த ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் மனிதர்களுக்கு ஒரு மாபெரும் நேர்வழியாக இறக்கப்பட்டுள்ளது. இது நேர்வழியின் விளக்கத்தையும், உண்மையையும் பொய்யையும் பிரித்துக் காட்டக்கூடிய விஷயங்களையும் கொண்ட தெள்ளத்தெளிவான அடையாளமாக இருக்கிறது.

ஆக, இதனால் இந்த மாதத்தில் திருக்குர்ஆனை அதிகமாக ஓதுவதன் பக்கம் நமக்கு கவனமூட்டப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கவனமூட்டியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ‘இந்த அருளுக்குரிய மாதத்திலோ மிகவும் அதிகமாகத் திருக்குர்ஆனை ஓத வேண்டும்’ என்ற விஷயத்தின் பக்கம் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு திருக்குர்ஆன் இறங்கியிருக்குமோ அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து முழுமையாக ஓதி வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்வின் இறுதி ஆண்டிலோ இருமுறை முழுமையாக ஓதப்பட்டது.

**திருக்குர்ஆனின் முக்கியத்துவமும், ரமலானுடன் அதற்கு இருக்கும் தொடர்பும் மிகவும் அதிகமானது.** இந்த விஷயத்தை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். திருக்குர்ஆனை ஓதுவதற்கும் கேட்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய பள்ளிவாசல்களில் திருக்குர்ஆனின்

தர்ஸூக்கான ஏற்பாடு உள்ளது. தராவீஹ் தொழுகைக்கும் ஏற்பாடு இருக்கிறது. திருக்குர்ஆனின் திலாவத்தில் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. MTA விலும் தினமும் திலாவத் வருகிறது. அதையும் கேட்க வேண்டும். ஆனால், அதைக் கேட்டு அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்யும்போதுதான் திருக்குர்ஆனின் உண்மையான பரக்கத்துகள் கிடைக்க முடியும்.

அல்லாஹ் திருக்குர்ஆனின் துவக்கத்திலேயே கூறி விட்டான்:

ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛۚ فِيْهِ ۛۚ هُدًى لِّلْمُتَّقِيْنَ

பொருள்: இது எவ்வித ஐயமும் இல்லாத மறையாகும். இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழி வழங்கக்கூடியதாகும்.

எனவே, இறையச்சத்தின்படி நடப்பதற்கு, ஓர் உண்மையான நம்பிக்கையாளர் ஆவதற்கு, அல்லாஹ் இந்த மறையின்படி அமல் செய்வதை கட்டாயமாக்கி விட்டான். ரமலானிலோ உண்மையான நம்பிக்கையாளர் ஆவதன் பக்கம் சிறப்பு கவனம் இருக்கிறது. இறையச்சத்தைப் பெறுவதற்கு சிறப்பான முயற்சி செய்யப்படுகிறது. ஆக, அதற்கான வழிமுறையை அல்லாஹ் புரிய வைத்து விட்டான். அதாவது, இந்த முயற்சியும், ஆசையும் இருக்கிறது என்றால், திருக்குர்ஆனை அதிகமாக ஓதிடுங்கள். அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: (திருக்குர்ஆனான) இதன் அருள்கள் மற்றும் பரக்கத்துகளின் கதவு நிரந்தரமாகத் திறந்துள்ளது. இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தது போன்றே எல்லாக் காலத்திலும் தனித்துவம் வாய்ந்ததாகவும், பசுமையாகவும் இருக்கிறது.

எனவே, நாம் ரமலானில் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துகின்ற அதே வேளையில், அதன் போதனைகள்படி அமல் செய்வதற்கும் முயற்சி இருக்க வேண்டும். ரமலானில் ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலுக்கு ஏற்ப திருக்குர்ஆனை ஓதுகிறார். எவர்களால் ஒருமுறை முழுமையாக ஓதி முடிக்க முடியாதோ அவர்களும் ஓரளவு பகுதியை ரமலான் நாள்களில் ஓதுவதற்குக் கண்டிப்பாக முயற்சி செய்கிறார்கள். ஒவ்வொருவரும் ரமலானில் குறைந்தது ஒருமுறையாவது திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்க கண்டிப்பாக முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறே திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் விளக்கவுரையைப் படிப்பதன் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். இவ்வாறு நமக்கு நன்மை தீமை பற்றி சரியாகத் தெரிய வரும்.

**திருக்குர்ஆன் மிகவும் சிரமமான நூலாகும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், அல்லாஹ் கூறுகிறான்:**

وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْاٰنَ لِلذِّكْرِ فَهَلْ مِنْ مُّدَّكِرٍ

பொருள்: மேலும், நிச்சயமாக நாம் திருக்குர்ஆனை அறிவுரை(யைப் பெறுவதற்)க்காக எளிமையாக்கி விட்டோம். எனவே, அறிவுரை பெறுபவர் எவரும் உண்டோ?

இது அல்லாஹ்வின் வாதம் ஆகும். அவன் கூறுகிறான்: நான் திருக்குர்ஆனில் எளிமையான போதனைகளை வழங்கியுள்ளேன். இந்தப் போதனைகள்படி அமல் செய்வதற்காக முழு முயற்சி செய்யுங்கள் என்று உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இறைவன் திருக்குர்ஆனைப் புரிய வைப்பதற்காக எல்லாக் காலத்திலும் ஆசிரியர்களையும் பிறக்கச் செய்தான். இந்தக் காலத்தில் அவன் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களை அனுப்பினான். அன்னார் நமக்கு அனைத்தையும் கூறி விட்டார்கள். எனவே, இப்பொழுதும் நாம் அதன்படி அமல் செய்யக்கூடியவர்களாக ஆகவில்லை என்றால், இது நமது பேறிழந்த நிலையாகும்.

இவ்வாறே கலீஃபாக்களும் விளக்கவுரைகளை வழங்கியுள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் தஃப்ஸீரே கபீர் எழுதியுள்ளார்கள். அதில் பாதி திருக்குர்ஆனின் விளக்கவுரையோ எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதுபோக, இன்னும் மொழியாக்கங்களும் விளக்கவுரைகளும் இருக்கின்றன. தஃப்ஸீரே சஃகீர் இருக்கிறது. அதிலும் பல விஷயங்கள் உள்ளன. பிறகு, ஜமாஅத்தில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவும் படுகிறது. அரபு மொழியிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன. ஆக, ரமலானில் நாம் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய அதே வேளையில், மொழியாக்கங்கள் மற்றும் விளக்கவுரைகளைக் கொண்டு அதன் பொருளையும், கட்டளைகளையும் புரிவதற்கும் அவற்றின்படி அமல் செய்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பிள்ளைகளின் ஆமீன் நிகழ்ச்சிக்காக மக்கள் என்னிடம் வருகிறார்கள். அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும்! பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்து, நீங்கள் உங்களுடைய ஒரு ஃபர்ளையோ நிறைவேற்றி விட்டீர்கள். ஆனால், திருக்குர்ஆன் ஓதுவதற்கும் அதன்படி அமல் செய்வதற்கும் பிள்ளைகளிடம் ஆர்வத்தையும், நேசத்தையும் உருவாக்குவதும் உங்களுடைய ஃபர்ள் (கடமை) ஆகும். எனவே, அஹ்மதி ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைப் பற்றி கவலைப்பட வேண்டும். அதாவது, அவர்கள் தாமும், அவர்களுடைய மனைவி மக்களும் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம், அதை திலாவத் செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மொழியாக்கத்தைப் படிப்பதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:** முஸ்லிம்கள் பெரும்பாலார் திருக்குர்ஆனை விட்டுவிட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால், பிறகும் அதன் ஒளிகளும், அருள்களும்,

நற்தாக்கங்களும் எப்பொழுதும் உயிரோட்டத்துடனும் புத்தம் புதிதாகவும் உள்ளன. ஆக, நான் இப்பொழுது சான்றுக்காக அனுப்பப்பட்டுள்ளேன்... திருக்குர்ஆனை விட்டுவிட்டு வெற்றி பெறுவது சாத்தியமற்ற, இயலாத ஒரு செயலாகும். இத்தகைய வெற்றி ஒரு கற்பனை செயலாகும். இதைத் தேடுவதில் இந்த மக்கள் மூழ்கியுள்ளார்கள்!

**பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** திருக்குர்ஆன் ஓதி அதன்படி அமல் செய்கின்ற நம்பிக்கையாளருக்கான எடுத்துக்காட்டு, சுவையும் நன்றாக இருந்து மணமும் நன்றாக உள்ள (ஆரஞ்சு வகை) பழத்தைப் போன்றது. திருக்குர்ஆன் ஓதாத நம்பிக்கையாளர் இருக்கிறார்; ஆனால், அதன்படி அமல் செய்கிறார். அவருக்கான எடுத்துக்காட்டு, சுவை நன்றாக இருந்து எந்த வாசமும் இல்லாத பேரீத்தம் பழத்தைப் போன்றது. திருக்குர்ஆன் ஓதுகின்ற நயவஞ்சகருக்கான எடுத்துக்காட்டு, மணம் நன்றாக இருக்கின்ற, சுவை கசப்பாக உள்ள (துளசி வகை) செடியைப் போன்றது. திருக்குர்ஆன் ஓதாத நயவஞ்சகருக்கான எடுத்துக்காட்டு சுவையும் கசப்பாக இருக்கின்ற வாசமும் அற்ற கசப்பான (குமட்டிக்) காயைப் போன்றது.

**மற்றோர் அறிவிப்பில் வருகிறது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** மக்களில் சிலர் அல்லாஹ்வின் மக்களாக இருக்கிறார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் மக்கள் யார்?' என்று கேட்டோம். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் காரர்கள், அதாவது, திருக்குர்ஆன் ஓதுபவர்கள் மற்றும் அதன்படி அமல் செய்பவர்கள் அல்லாஹ்வின் மக்களாக, அல்லாஹ்வின் சிறப்பான அடியார்களாக இருக்கிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனின்படி நடக்கும் மக்களே வெற்றி பெறுவார்கள்.**

தற்போது முஸ்லிம்களின் நிலை எப்படி இருக்கிறது என்றால், எல்லாப் பக்கமும் குழப்பம் நிலவுகிறது. அரசாங்கம் பொதுமக்களுடன் சண்டையிடுகிறது. பொதுமக்கள் அரசாங்கத்தின் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள். ஒருவர் மற்றவரைக் கொலை செய்கிறார்கள். இவை அனைத்தும் திருக்குர்ஆனைக் கைவிட்டதன் விளைவாகும். சொல்வதற்கோ இருவரின் கைகளிலும் திருக்குர்ஆன் உள்ளது. ஆனால், இருவருமே திருக்குர்ஆனின் போதனைகளை விட்டும் தொலைவில் இருக்கிறார்கள். திருக்குர்ஆனின்படி அமல் செய்பவர்களாக இருந்தால், ஒருபோதும் இந்த விஷயங்கள் இருக்காது. இந்தக் காலத்தில் அல்லாஹ் அனுப்பிய சார்பாளரை நிரகாரிக்கிறார்கள். அவரை ஏற்பதற்கு இவர்கள் ஆயத்தமாக இல்லை. இத்தகைய சூழலில் இவர்களால் திருக்குர்ஆனிலிருந்து ஒருபோதும் பலன் பெற முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நினைவில் கொள்ளுங்கள்! திருக்குர்ஆன் உண்மையான பரக்கத்துகளின்

நீரூற்றாகும். ஈடேற்றத்திற்கான உண்மையான வழியாகும். திருக்குர்ஆனின்படி செயல்படாமல் இருப்பது செயல்படாதவர்களின் தவறாகும்.... இப்பொழுதும் அவர்களுக்குக் கட்டாயமானது என்னவென்றால், அவர்கள் இந்த நீரூற்றை மகத்துவமிக்க அருட்கொடையாக எண்ணி, இதற்கு மதிப்பளிக்க வேண்டும். இதன்படி அமல் செய்வதுதான் இதற்கு மதிப்பளிப்பது ஆகும். பிறகு, இறைவன் அவர்களுடைய இன்னல்களையும் சிரமங்களையும் எப்படி அகற்றி விடுகிறான் என்று பாருங்கள்!

முஸ்லிம்களின் நிலையோ எப்படி இருக்கிறது என்றால், திருக்குர்ஆனின் போதனைகளை விட்டு தொலைவில் விலகியிருக்கிறார்கள். திருக்குர்ஆனை அவர்கள் கைவிட்டு விட்டார்கள். அதன்படி அமல் செய்வதில்லை. திருக்குர்ஆனை நேசிப்பதாக வெற்று வாதம் புரிகிறார்கள். பாக்கிஸ்தானில் இவர்கள் அஹ்மதிகள் திருக்குர்ஆன் ஓதக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்து வைத்துள்ளார்கள். அவர்கள் தாமும் இதன்படி அமல் செய்ய மாட்டார்கள். அஹ்மதிகள் மீது எவ்வளவு கட்டுப்பாடுகள் விதித்தாலும்சரி, எவ்வளவு முழு மூச்சாக முயன்றாலும்சரி, இவர்களால் திருக்குர்ஆனின் போதனையை நம்முடைய உள்ளங்களிலிருந்து புறந்தள்ள முடியாது. அதன் மீதான நேசத்தை நம்முடைய இதயங்களிலிருந்து வெளியேற்ற முடியாது.

ஆக, இந்தக் காலத்தில் எல்லாரையும் விடப் பெரிய கடமை அஹ்மதிகளுடையதாகும். திருக்குர்ஆன்படி அமல் செய்வது அஹ்மதி முஸ்லிம்களின் கடமையாகும். இவ்வாறு இஸ்லாமியர் அல்லாத மற்றவர்கள் அவர்களுடைய அமலைப் பார்த்து உண்மையான இஸ்லாமிய போதனை என்ன, திருக்குர்ஆனின் கட்டளைகள் யாவை என்பதைப் புரிய முடியும். இவை அமைதி, சமாதானம், அன்பு, நேசம் ஆகியவற்றிற்கான கட்டளைகள் ஆகும். இவை சமூகத்தில் சகோதரத்துவத்தைப் பரப்புவதற்கான போதனைகள் ஆகும். இவை அடியார்களுக்கான உரிமைகளை செலுத்துவதற்கான போதனைகள் ஆகும். ஆக, இதன் பக்கம் அஹ்மதிகள் மிகவும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது.

**ஓர் அறிவிப்பில் வருகிறது,** ஒருமுறை ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, அண்மையில் பல குழப்பங்கள் உருவாகும் என்று கூறினார்கள். அந்தக் குழப்பங்களிலிருந்து விடுபடுவதற்கான வழி எது என்று கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், 'குழப்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி இறைவனின் மறையாகும்' என்று கூறினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* நாம் நம்மையும் நம் வழித்தோன்றல்களையும் காப்பாற்றுவதற்காக அல்லாஹ்வின் மறையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. அப்பொழுதுதான் நாம் நேர்வழியும் பெற முடியும். குழப்பங்கள், சச்சரவுகளிலிருந்து தப்பவும் முடியும். அல்லாஹ் நமக்காக இறக்கியுள்ள அந்தக் கட்டளைகளைப் புரியவும் முடியும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனை வெளிப்படுத்தி ஓதுபவர், வெளிப்படையாக சதக்கா கொடுப்பவரைப் போன்றவர் ஆவார். திருக்குர்ஆனை மறைத்து ஓதுபவர், மறைவாக சதக்கா கொடுப்பவரைப் போன்றவர் ஆவார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:* நாம் நினைவில் கொள்ள வேண்டும்! சதக்கா இன்னல்களையும், ஆபத்துகளையும், குழப்பங்களையும் அகற்றி விடுகிறது என்றும் அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. ஆக, திருக்குர்ஆனை ஓதுவது, புரியவும் செய்கிற வகையில் ஓதுவது, சதக்காவைப் போன்று ஏற்றுக் கொள்ளப்படும். மேலும், அதன் பரக்கத்துகளால் மனிதன் எல்லாக் குழப்பங்களிலிருந்தும் தப்பித்திருப்பான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** உள்ளம் கடினமாக இருக்கின்றது என்றால், திருக்குர்ஆனை மீண்டும் மீண்டும் ஓதுவதே அதை மென்மை ஆக்குவதற்கான வழிமுறையாகும். எங்கெங்கெல்லாம் துஆ இருக்கிறதோ அங்கு இதே இறை கருணை எனக்கும் கிடைக்க வேண்டும் என நம்பிக்கை கொண்டவரின் உள்ளம் விரும்புகிறது. திருக்குர்ஆன் ஒரு தோட்டத்தைப் போன்றது. ஓரிடத்திலிருந்து மனிதன் ஏதாவது ஒரு வகை பழத்தைப் பறிக்கிறான். பிறகு, முன்னால் சென்று வேறு ஒரு வகையான பழத்தைப் பறித்துக் கொள்கிறான். எனவே, ஒவ்வோர் இடத்துக்கும் ஏற்றாற்போல் பலன் பெற வேண்டும்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ரமலான் நாள்களில், நாம் குறிப்பாகத் திருக்குர்ஆன் பக்கம் கவனம் செலுத்துகின்ற அதே வேளையில், இவ்வாறு உறுதிமொழியும் எடுத்துக் கொள்ள வேண்டும்: நாம் இந்த கவனத்தை எப்பொழுதும் நிலைபெறச் செய்வோம். எப்பொழுதும் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனத்தை வைப்போம். இதன்படி செயல்படுவதன் பக்கமும் கவனம் செலுத்துவோம். நம் பிள்ளைகளுக்கும் திருக்குர்ஆன் ஓதுமாறு வலியுறுத்துவோம். இது நடக்கும்போது, நம் அனைவரின் வாழ்வு எப்பொழுதும் வெற்றிக்குரியதாக இருக்கும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)